# கீழக்கரை நகர்மன்ற 31.03.2020–ம் தேதிய கூட்டத்தின் நடவடிக்கைகள்

## பொருள் :1

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள மழைநீர் மற்றும் கழிவுநீர் செல்லும் கல்வெட்டுகள் மற்றும் வாறுகாலின் மேற்புற மூடிகளை பழுது நீக்கம் செய்யும் பணிகள் ரூ.2,15,000/– மதிப்பீட்டில் செய்வதற்கும், அதற்குரிய செலவினங்கள் இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளும் பொருட்டு இந்நகர் மன்றத்தில் 28.02.2020–ந் தேதி அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் மழைநீர் மற்றும் கழிவுநீர் செல்லும் கல்வெட்டுகள் மற்றும் வாறுகாலின் மேற்புற மூடிகளை பழுது நீக்கம் செய்யும் பணி செய்வதற்கு 27.03.2020–ந் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அன்று வரப்பெற்ற கீழ்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை மன்றம் பார்வையிட்டு ஒப்புக்கொள்ளவேண்டிய விஷயம்.

| வ. எண் | திட்டம்/ வேலையின் விபரம் | மதிப்பீடு (இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| **வருவாய் நிதி 2019–2020** | | | | |
| 1. | கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள மழைநீர் மற்றும் கழிவுநீர் செல்லும் கல்வெட்டுகள் மற்றும் வாறுகாலின் மேற்புற மூடிகளை பழுது நீக்கம் செய்யும் பணி | 2.15 | திரு.ஆர். உத்தண்டி ஒப்பந்ததாரர், நேரு நகர், கலெக்ட்ரேட் வளாகம், இராமநாதபுரம். | ரூ.2,14,071/– மதிப்பீட்டு தொகைக்கு 0.43% குறைவு |
| | | | திரு.பி. சிவக்குமார் ஒப்பந்ததாரர், முனீஸ்வரம், கீழக்கரை. | ரூ.2,17,960/– மதிப்பீட்டு தொகைக்கு 1.38% அதிகம் |

**(கோப்பு எண்.141/2020/இ1)**

**அலுவலகக் குறிப்பு:**

மதிப்பீட்டு தொகையை விட 0.43% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள இராமநாதபுரம், ஒப்பந்ததாரர், திரு.ஆர். உத்தண்டி, என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

## தீர்மானம் எண்.702 அனுமதிக்கப்பட்டது.

## பொருள் :2

கீழக்கரை நகராட்சி பகுதிகளில் தற்போது பரவி வரும் மிககொடிய வைரஸ் கிருமியான கொரானோ வைரஸிலிருந்து பொதுமக்களை காத்திடவும் முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளவும் நகராட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண் 5437/ஜே1/2020 நாள் 09.03.2020–ன் படியும் மற்றும் கூடுதல் தலைமை செயலாளர் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களின் நேர்முக கடித எண் 6792/MA.IV(2)/2020-

1 நாள் 13.03.2020—ன் படியும் அந்தந்த நகராட்சி நிர்வாகம் அலுவலகம் மூலம் பொதுமக்கள் கூடும் இடஙகளை தீவிரமாக கண்காணித்து கிருமி நாசினி பொருட்கள் தெளித்து வைரஸ் கிருமி பரவாமல் தடுத்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென உத்திரவிடப்பட்டுள்ளது. அதன் படி மேற்படி நடவடிக்கைகள் மேற்கொள்ள தேவையான பொதுசுகாதார பொருட்கள் மற்றும் கிருமி நாசினி பொருட்கள் அரசு அஙகீகாரம் பெற்ற கூட்டுறவு நிறுவனத்திடமிருந்து நேரடியாக கொள்முதல் பெற்றுக்கொள்ளவும் அதற்கான உத்தேச செலவீனம் ரூ 5,00,000/—க்கு ஏற்கெனவே 16.03.2020 அன்று அனுமதி பெறப்பட்டுள்ளது. மேலும் தற்போது கொரானா வைரஸ்நோய் தீவிரமடைந்துள்ளதால் பொதுசுகாதார நலன் கருதி அவசர அவசியமாக இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அவர்களின் நேரடி ஆய்வின் போது கீழக்கரை நகர் பகுதியில் தற்போதுள்ள நிலைமையை கருத்தில் கொண்டு வீடுவாரியாக காய்ச்சல் தொற்று இருக்கிறதா என ஆய்வு செய்ய கூடுதலாக 200 மஸ்தூர் பணியாளர்களை நியமித்து அவர்களுக்கு தேவையான மருத்துவ உபகரணஙகள் வழஙகவும் மற்றும் பொதுசுகாதார கிருமி நாசினி பொருட்களை தேவையான அளவு வாஙகி இருப்பில் வைத்து கொள்ளுமாறும் உத்திரவிட்டுள்ளார். பொதுசுகாதார பொருட்கள் மற்றும் கிருமிநாசினி பொருட்கள் வாஙகவேண்டியுள்ளதால் ரூ 20,00,000/—க்கு உத்தேச செலவீனம் ஆகும் எனவும் இந்நகராட்சி துப்புரவு ஆய்வாளர் அவர்களின் குறிப்புரையை ஏற்று இச்செலவீனத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளும் பொருட்டு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**(கோப்பு எண் 195/2020/எச்1)**

<u>அலுவலக குறிப்பு</u>

1. பொதுசுகாதார அவசர அவசியம் கருதி பொதுசுகாதார பொருட்கள் மற்றும் கிருமி நாசினி பொருட்கள் வாஙகுவதற்கான உத்தேச செலவீனம் ரூ 20,00,000/—யை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2. அரசு அஙகீகாரம் பெற்ற கூட்டுறவு நிறுவனத்திடமிருந்து நேரடியாக கொள்முதல் பெற்றுக்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்

## <u>தீர்மானம் எண்.703 அனுமதிக்கப்பட்டது.</u>

## <u>பொருள் :3</u>

கீழக்கரை நகராட்சியில் பணிபுரியும் பணியாளர்கள் அலுவலக வேலையாக வெளியூர்களுக்கு சென்று வர வேண்டியுள்ளது. அவ்வாறு பயணங்கள் மேற்கொள்ளும் பணியாளர்களுக்கு பயணப்படி தொகை வழங்க ஜனவரி 2020 முதல் டிசம்பர் 2020 வரை ஒராண்டிற்கான உத்தேச செலவினம் ரூ.5,00,000/—க்கு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

(கோப்பு எண்.110/2020/இ2)

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

அலுவலக பணியாக வெளியூர் சென்று வரும் பணியாளர்களுக்கு இத்தொகையானது வழங்கப்படுகிறது. எனவே, பயணப்படி விதிமுறைகளின்படி செலவினமானது மெற்கொள்ளப்படும் நிலையில் மேற்கண்ட செலவினத்தை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.704 அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் :4**

இராமநாதபுரம் மருத்துவ கல்லூரி அடிக்கல் நாட்டு விழாவிற்கு வருகை தந்த மாண்புமிகு தமிழக முதல்வர், மாண்புமிகு துணை முதல்வர் மற்றும் அமைச்சர் பெருமக்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்து விளம்பரம் மற்றும் இந்நகராட்சியின் வளர்ச்சித் திட்டப்பணிகள் தினசரி நாளிதழ்களில் விளம்பரம் செய்யப்பட்ட வகைக்குரிய விளம்பர கட்டணங்கள் வழங்கக் கோரி இந்நகராட்சிக்கு கீழ்காணும் விவரப்படி பட்டியல்கள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண். | நாளிதழ் பெயர் | பட்டியல் எண் / நாள். | பட்டியல் வரப்பெற்ற நாள் | பட்டியல் தொகை |
|---|---|---|---|---|
| 1. | மாலை முரசு நாளிதழ் | AD19202022/ 02.03.2020 | 10.03.2020 | ரூ.18,900/- |
| 2. | மாலை மலர் நாளிதழ் | MDU-D20030018/ 01.03.2020 | 10.03.2020 | ரூ.15,750/- |
| 3. | மாலை தமிழகம் நாளிதழ் | MT-2544/2020-21 /03.03.2020 | 09.03.2020 | ரூ.14,700/- |

மேற்படி விளம்பர கட்டணங்கள் வழங்குவதற்கு மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

(கோப்பு எண்.174/2020/இ1)

<u>அலுவலகக் குறிப்பு:</u>

தினசரி நாளிதழ்களில் விளம்பரம் செய்யப்பட்டதற்குரிய விளம்பர கட்டணங்கள் இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.705 அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் :5</u>**

இந்நகராட்சியின் பொதுமக்களுக்கு முக்கிய அறிவிப்பு விளம்பரம் மாலை தமிழகம் நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்ட வகைக்கு கட்டணம் ரூ.14,700/–க்கு பட்டியல் எண்.MT-2662/2020-21, நாள்.19.03.2020 இந்நகராட்சிக்கு 24.03.2020–ம் தேதி வரப்பெற்றுள்ளது. மேற்படி பட்டியல் ரூ.14,700/–மட்டும் வழங்குவதற்கு மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

(கோப்பு எண்.174/2020/இ1)

<u>அலுவலகக் குறிப்பு:</u>

மாலை தமிழகம் நாளிதழில் விளம்பர கட்டணம் ரூ.14,700/–யை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.706 அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>பொருள் :6</u>**

இந்நகராட்சி பொதுமக்களுக்கு விழிப்புணர்வு விளம்பரம் தினத்தந்தி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்ட வகைக்குரிய கட்டணம் ரூ.16,800/–க்கு பட்டியல் எண். MDU-1920-0030246 நாள்.16.03.2020 இந்நகராட்சிக்கு 20.03.2020–ம் தேதி வரப்பெற்றுள்ளது. மேற்படி பட்டியல் ரூ.16,800/– மட்டும் வழங்குவதற்கு மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

(கோப்பு எண்.174/2020/இ1)

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

தினத்தந்தி நாளிதழில் விளம்பர கட்டணம் ரூ.16,800/–யை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.707அனுமதிக்கப்பட்டது.</u>**

## பொருள் :7

கீழக்கரை நகராட்சியின் 2020–2021 ஆம் ஆண்டிற்கான வரவு, செலவு திட்ட அறிக்கைகள் (Budget) கணினி மென்பொருளில் பதிவேற்றம் செய்யும் பொருட்டு தயார் செய்யப்பட்டுள்ள வரவு, செலவு திட்ட அறிக்கைகள் மற்றும் 2019–2020 ஆம் ஆண்டு திருத்திய வரவு செலவு திட்ட அறிக்கைகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

(கோப்பு எண்.216/2020/இ1)

**அலுவலகக் குறிப்பு:**

2020–2021 ஆம் ஆண்டின் வரவு செலவு திட்ட அறிக்கைகள் மற்றும் 2019–2020 ஆம் ஆண்டு திருத்திய வரவு செலவு திட்ட அறிக்கைகளை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண்.708 அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் :8

கீழக்கரை நகராட்சி பகுதிகளில் தற்போது பரவி வரும் மிககொடிய வைரஸ் கிருமியான கொரானோ வைரஸிலிருந்து பொதுமக்களை காத்திடவும் முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளவும் நகராட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண் 5437/ஜே1/2020 நாள் 09.03.2020–ன் படியும் மற்றும் கூடுதல் தலைமை செயலாளர் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் துறை அவர்களின் நேர்முக கடித எண் 6792/MA.IV(2)/2020-1 நாள் 13.03.2020–ன் படியும் அந்தந்த நகராட்சி நிர்வாகம் அலுவலகம் மூலம் பொதுமக்கள் கூடும் இடஙகளை தீவிரமாக கண்காணித்து கிருமி நாசினி பொருட்கள் தெளித்து வைரஸ் கிருமி பரவாமல் தடுத்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென உத்திரவிடப்பட்டுள்ளது. அதன்படி மேற்படி நடவடிக்கைகள் மேற்கொள்ள தேவையான பொதுசுகாதார பொருட்கள் மற்றும் கிருமி நாசினி பொருட்கள் அரசு அஙகீகாரம் பெற்ற கூட்டுறவு நிறுவனத்திடமிருந்து நேரடியாக கொள்முதல் பெற்றுக்கொள்ளவும் அதற்கான உத்தேச செலவீனம் ரூ 5,00,000/– ஆகும் எனவும் இந்நகராட்சி துப்புரவு ஆய்வாளர் அவர்களின் குறிப்புரையை ஏற்று இச்செலவீனத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளும் பொருட்டு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**(கோப்பு எண் 195/2020/எச்1)**

**அலுவலக குறிப்பு**

1. பொதுசுகாதார அவசர அவசியம் கருதி பொதுசுகாதார பொருட்கள் மற்றும் கிருமி நாசினி பொருட்கள் வாஙகுவதற்கான உத்தேச செலவீனம் ரூ 5,00,000/–யை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2. அரசு அஙகீகாரம் பெற்ற கூட்டுறவு நிறுவனத்திடமிருந்து நேரடியாக கொள்முதல் பெற்றுக்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண்.709 அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் :9**

இந்நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளிலும் பொருத்தப்பட்டு பயன்பாட்டில் இருந்த வந்த தெருமின்விளக்குகள் பழுதுகள் ஏற்பட்டு பல இடங்களில் மின்விளக்குகள் எரியாமல் இருள் சூழ்ந்து காணப்படுகிறது. எரியாத நிலையில் உள்ள தெருமின் விளக்குகளை மாற்றி எரிய வைப்பதற்கு தற்காலிகமாக கீழ்காணும் பொருட்களை வாங்கி தரும்படி இவ்வலுவலக மின்பணியாளரால் கோரப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| 1) 18w LED குண்டு பல்ப் | – 150 Nos. |
| 2) ஹோல்டர் | – 150 Nos. |
| 3) 1.0 Sq.m.m வயர் | – 1 Coil |

இந்நகர் பொதுமக்களின் நலன் கருதி தெருமின் விளக்குகளில் ஏற்படும் பழுதுகளை நீக்கம் செய்து நல்ல முறையில் எரிய வைப்பதற்கு தேவையான பராமரிப்பு பொருட்கள் 2020–2021 ஆம் ஆண்டிற்கு வாங்குவதற்கு ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொண்டு வரும் நிலையில் கோவிட்–19 விழிப்புணர்வு மற்றும் தடுப்பு நடவடிக்கைக்காக 25.03.2020–ந் தேதி முதல் ஊரடங்கு அமலில் உள்ளதால் ஒப்பந்தப்புள்ளி பெறுவதற்குரிய அசாதாரன சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. மேலும், இந்நகராட்சிக்குட்பட்ட பல இடங்களில் தெருமின் விளக்குகள் எரியாமல் இருந்து வருவதால், பொதுமக்களிடமிருந்து புகார்கள் வந்த வண்ணம் உள்ளது. அவற்றை உடனடியாக சரி செய்யும் பொருட்டு நிர்வாக நலனை கருத்தில் கொண்டு இராமநாதபுரம் மாவட்டம் கூட்டுறவு சிறப்பு அங்காடியில் தற்காலிகமாக மேற்காணும் தெருமின் விளக்கு பொருட்களை வாங்குவதற்கு இந்நகராட்சி பொறியாளரால் தெரிவிக்கப்பட்டுள்ளது மன்றத்தின் அனுமதி வேண்டி முன்வைக்கப்படுகிறது.

**(கோப்பு எண்.191/2020/இ1)**

**அலுவலகக் குறிப்பு:**

1. இந்நகர் மக்களின் நலன்கருதியும், தெருவிளக்கு பராமரிப்பு அவசியத்தை கருத்தில் கொண்டும், தெருமின் விளக்கு பொருட்களை தற்காலிகமாக கூட்டுறவு சிறப்பு அங்காடியில் வாங்க மன்றம் அனுமதிக்கலாம்.
2. இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.710 அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் :10</u>**

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளில் அமைந்துள்ள தெருமின் விளக்குகளான குழல் விளக்கு, சோடியம் ஆவி விளக்கு, CFL விளக்குகள் மற்றும் LED விளக்குகளில் ஏற்படும் பழுதுகளை பழுது நீக்கம் செய்து நல்ல முறையில் எரிய வைப்பதற்கு தேவையான தெருமின் விளக்கு பராமரிப்பு பொருட்கள் 2020–2021 ஆம் ஆண்டுக்கு வாங்கித் தருமாறு இந்நகராட்சி மின்பணியாளரால் கோரப்பட்டுள்ளது. ஆகவே, இந்நகர் பொதுமக்களின் நலன் கருதி தெருமின் விளக்கு பராமரிப்பு பொருட்கள் 2020–2021 ஆம் ஆண்டிற்கு வாங்குவதற்கு ஒப்பந்தப்பள்ளி நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு பொதுப்பணித்துறை விகிதங்களின் நிலையான அட்டவணையில் (Standard Schedule of Rates) விலைவிகிதங்கள் குறிப்பிடப்படாத தெருமின் விளக்கு பொருட்களுக்கு உள்ளூர் விலைப்புள்ளி பெறுவதற்கு 20.02.2020–ந் தேதிய பொறியாளர்களின் அறிக்கையின்படி 28.02.2020–ந் தேதி விலைப்புள்ளிகள் பெறப்பட்டு இந்நகர்மன்றத்தில் அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன்படி தெருமின் விளக்கு பராமரிப்பு பொருட்கள் 2020–2021 ஆம் ஆண்டு விநியோகம் செய்வதற்கு ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு இந்நகராட்சிப் பொறியாளர்களால் ரூ.8,70,000/–க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேலும் இச்செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளும் பொருட்டு அனுமதி கோரப்பட்டுள்ளது மன்றத்தின் ஒப்புதலுக்கு முன் வைக்கப்படுகிறது.

**(கோப்பு எண். 126/2020/இ1)**

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

1) இந்நகர் பொதுமக்கள் நலன்கருதியும், தெருவிளக்கு பராமரிப்பு பணியின் அவசியத்தை கருத்தில் கொண்டும் பொறியாளர்களால் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.8,70,000–ஐ மன்றம் அங்கீகரிக்கலாம்.

2) இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.711அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>பொருள் :11</u>**

கீழக்கரை நகராட்சிக்கு சொந்தமான புதிய உரக்கிடங்கில் 2016–17 ம் ஆண்டு தூய்மை இந்தியா இயக்கம் – திடக்கழிவு மேலாண்மை திட்டம் மற்றும் 2018-19 & 2019–2020 ம் ஆண்டு ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி திட்டத்தின் கீழ் (Fecal Sludge and Septage Management) மனித கழிவுகளை உரமாக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. திட்டப்பணிகள் அனைத்தும் நல்லமுறையில் செயல்படுத்துவதற்கு ஏதுவாக உரக்கிடங்கிற்கு புதிதாக மின்கம்பங்கள் மற்றும் மின்கம்பிகள் அமைத்து உயர்மின் அழுத்த மும்முனை இணைப்பு (3 phase) பெறுவதற்கு தமிழ்நாடு மின்உற்பத்தி பகிர்மான கழகம் மூலம் புதிதாக மின்கம்பங்கள் மற்றும் மின்கம்பிகள் அமைக்க வேண்டியுள்ளது. மேற்காணும் பணி செய்வதற்கு சாலை ஓரங்களில் இடையூராக

உள்ள கருவேல மரங்கள் மற்றும் முட்புதர்களை அகற்றித் தருமாறு தமிழ்நாடு மின்உற்பத்தி பகிர்மான கழகம் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளதால், மேற்காணும் இடத்தில் உள்ள கருவேல மரங்கள் முட்புதர்களை ஜேசிபி மூலம் அப்புறப்படுத்தி தருமாறு இவ்வலுவலக மின்பணியாளரால் 28.02.2020–ந் தேதிய அறிக்கையில் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியின் அவசியம் கருதி உள்ளூர் விலைப்புள்ளி பெற்று JCB இயந்திரம் மூலம் பணிகள் மேற்கொள்வதற்கும் அதற்கான செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவதற்கும் இந்நகராட்சி பொறியாளர்களால் அனுமதி கோரப்பட்டுள்ளது மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.
(கோப்பு எண்.175/2020/இ1)

<u>அலுவலகக் குறிப்பு:</u>

1. இந்நகராட்சி உரக்கிடங்கில் புதிய மின்கம்பங்கள் மற்றும் மின்கம்பிகள் அமைத்து மும்முனை இணைப்பு (3 phase) பெறுவதற்கு சாலை ஓரங்களில் இடையூராக உள்ள கருவேல மரங்கள் மற்றும் முட்புதர்களை JCB இயந்திரம் மூலம் அகற்றும் பணிகள் மேற்கொள்வதற்கு உள்ளூர் விலைப்புள்ளி பெற்று பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2. இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.712 அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் :12</u>

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் சட்ட மன்ற பேரவை விதி எண்.110–ன் கீழ் வெளியிடப்பட்ட அறிவிப்பினை தொடர்ந்து கீழக்கரையை தலைமையிடமாகக் கொண்டு தனி வட்டம் அமைக்கவும், மேற்படி வட்டம் இராமநாதபுரம் மற்றும் கடலாடி வட்டங்களை பிரித்து, புதிய வட்டாட்சியர் அலுவலகம் இந்நகராட்சி கட்டிடத்தில் செயல்படுவதற்கு இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடிதம் ந.க.எண்.அ4/33619/2012, நாள்.06.09.2014& 22.09.2014 மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் ந.க.எண்.29997/2014/TP3, நாள்.20.01.2015–ந் தேதிய அனுமதிகளின் அடிப்படையில், இந்நகராட்சி அலுவலக கட்டிடத்தில் 14.03.2015 முதல் புதிய வட்டாட்சியர் அலுவலகம், கீழக்கரை நகராட்சி அலுவலகத்தில் முதல் தளத்தில் செயல்பட்டு வந்தது.

இந்நகராட்சி அலவலக கட்டிடத்தில் இயங்கி வந்த, கீழக்கரை வட்டாட்சியர் அலுவலகம் 29.02.2020ந் தேதியில் ஒப்புடைப்பு செய்வதாகவும், தற்போது புதிதாத கட்டப்பட்டுள்ள வட்டாட்சியர் அலுவலகம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கடந்த 01.03.2020 அன்று காணொளி காட்சி மூலம் திறந்து வைக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து, மேற்படி புதிய வட்டாட்சியர் அலுவலகம் 11.03.2020 முதல் இயங்கி வருகிறது என்ற

விவரத்தினை தெரிவித்து வரப்பெற்றுள்ள கீழக்கரை வட்டாட்சியர் அவர்களின் கடிதம் ந.க.அ1/187/2020 நாள்.16.03.2020 மன்றத்தின் பார்வைக்கும், தகவலுக்கும் வைக்கப்படுகிறது.

**கோப்பு எண்.990/2014/இ1**

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

கீழக்கரை வட்டாட்சியர் அவர்களின் ந.க.அ1/187/2020 நாள்.16.03.2020ன்படியான கடிதத்தினை மன்றம் பார்வையிட்டு, பதிவு செய்யலாம்.

**<u>தீர்மானம் எண்.713 அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் :13</u>

அரசாணை (நிலை) எண்.79, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் (மா.ந.2) துறை, நாள்.31.05.2013 மற்றும் அரசாணை (நிலை) எண்.118, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் (மா.ந.2) துறை, நாள்.26.09.2014–ல் தெரிவித்துள்ளதன்படி, அம்மா உணவகத்திற்கு மதிய நேரம் தயிர் சாதம் தயார் செய்ய தேவையான தயிர் விநியோகம் செய்ய 01.04.2020 முதல் 31.07.2020 வரை மூன்று மாதங்களுக்கு மட்டும் விலைப்புள்ளி கோரப்பட்டதில் 26.03.2020–ந் தேதி வரப்பெற்ற கீழ்காணும் இரண்டு விலைப்புள்ளிகள் மன்றம் பார்வையிட்டு குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ள வேண்டிய விஷயம்.

| **வ. எண்** | **பொருட்கள் விபரம்** | **லிட்டர் ஒன்றுக்கு** | **மில்க் ஏஜென்ஜி பெயர்** | |
|---|---|---|---|---|
| | | | **சி. ஆறுமுகம், த/பெ. செல்லையா பால் மற்றும் தயிர் வியாபாரம் 8/297, கோகுல் நகர், கீழக்கரை.** | **கமுதி பால் கடை, வள்ளல் சீதக்காதி சாலை, கீழக்கரை.** |
| 1 | தயிர் | 1 | 80/– லிட்டருக்கு | 82/– லிட்டருக்கு |

**<u>(கோப்பு எண்.187/2020/இ1)</u>**

**<u>அலுவலக குறிப்பு</u>**

1) அம்மா உணவகஙகளுக்குத் தேவைப்படும் ஆவின் தயிர் மொத்த விலை அடிப்படையில் கொள்முதல் செய்ய அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆவின் கூட்டுறவு மாவட்ட மொத்த விற்பனை நிலையம், இராமநாதபுரத்தில் தயிர் தற்போது விநியோகம் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளதின் அடிப்படையில் உள்ளூர் கடைகளில் தயிர் விநியோகம் செய்ய விலைப்புள்ளி கோரப்பட்டதில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள **திரு.சி. ஆறுமுகம், பால் மற்றும் தயிர் வியாபாரம்,** கீழக்கரை விலைப் புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.
2) இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.714 அனுமதிக்கப்பட்டது.</u>**

## பொருள் :14

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 10ல் சர்வே எண்.596/7—ல் பொதுப்பாதை ஆக்கிரமிப்பு தொடர்பாக திருமதி.சித்தி சஹிலா பானு என்பரால் இராமநாதபுரம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு எண். O.S.No.13/2020-ன் படியும், மதுரை உயர்நீதிமன்றம் மதுரை கிளை வழக்கு எண். W.P(MD)No.2787/ 2020ன்படியும் தொடரப்பட்ட வழக்கிற்கு இந்நகராட்சி சார்பாக வாதாடிய வகைக்கு வழக்குரைஞர் கட்டணம் ரூ.30,000/— (ரூ.15,000 + ரூ.15,000) வழக்குரைஞர் திரு.ஏ. கண்ணன் அவர்களால் 05.03.2020—ம் தேதி கோரப்பட்டுள்ளது.

மேற்காணும் வழக்கு தொடர்பாக சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை வழக்குரைஞர் திரு.ஏ. கண்ணன் அவர்களால் கோரப்பட்டுள்ள வழக்குரைஞர் கட்டணம் ரூ.30,000/— மட்டும் வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

(கோப்பு எண்.124/2020/எப்1)

<u>அலுவலகக் குறிப்பு:</u>

வழக்குரைஞர் கட்டணம் ரூ.30,000/—யை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.715 அனுமதிக்கப்பட்டது.</u>**

## பொருள் :15

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் தலைமையில் அம்மா உணவக திட்டம் குறித்து 28.01.2020 அன்று நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில், தமிழகம் முழுவதும் உள்ள அம்மா உணவகங்களை மேம்படுத்துதல், அம்மா உணவக கட்டிடங்களை முழுமையாக வணிக ரீதியில் உபயோகித்து உள்ளாட்சி அமைப்புகளுக்கான செலவினத்தை கட்டுப்படுத்துதல் போன்ற கோரிக்கைகள் பரிசீலிக்கப்பட்டதில், கீழ்கண்டவாறு முடிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்ற விவரத்தினை சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் ந.க.எண்.18812/2018/மாநஅ4, நாள்.26.02.2020—ல் தெரிவிக்கப் பட்டுள்ளது.

1) அம்மா உணவகங்கள் நடத்த தேவையான இடத்தினை விட கூடுதலாக இடம் உள்ள கட்டிடங்களில், உணவகத்திற்கு எந்தவித இடையூறும் இல்லாதவாறு ஆவின் விற்பனையகம், தானியங்கி பணம் வழங்கும் இயந்திரங்கள் போன்றவற்றை அனுமதிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

2) மாநகராட்சி / நகராட்சி அலவலர்கள் அடங்கிய குழுவினை அமைத்து, அம்மா உணவகங்களை தொடர்ச்சியாக ஆய்வு செய்ய வேண்டும். அதன் ருசி மற்றும் சுத்தம் சுகாதாரத்தினை முறையாக கண்காணிக்க வேண்டும். இதன் மூலம் ஏழை தொழிலாளர்கள் பயன்பெறுவதினை அதிகரிக்க இயலும்.
3) பெருநகர சென்னை மாநகராட்சியில் வழங்கப்படுவதை போல மற்ற மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளிலும் தினமும் மதியம் தயிர் சாதம் மற்றும் சாம்பார் சாதத்துடன், கறிவேப்பிலை சாதம் மற்றும் எலுமிச்சை சாதத்தை இவற்றில் ஏதாவது ஒன்று தரப்பட வேண்டும். இதர மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் புளிசாதம் வழங்கிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
4) பணியாளர்களுக்கு முறையான பயிற்சி வழங்கி அம்மா உணவகங்களை மாநகராட்சி / நகராட்சி அலுவலர்களால் தொடர் ஆய்வு செய்து உணவகங்களின் சுத்தம் மற்றும் உணவுப் பொருளின் தரத்தை சோதனை செய்யப்பட வேண்டும்.

மேற்காணும் பொருள் மீது உரிய நடவடிக்கை எடுக்க மாநகராட்சி / நகராட்சி ஆணையர்களுக்கு அனைத்து மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் செயல்படும் அம்மா உணவகங்களை செவ்வனே செயல்படுத்துதல் குறித்து அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ள கடிதம் மன்றத்தின் பார்வைக்கும், தகவலுக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு:</u>

சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் ந.க.எண்.18812/2018/மாநஅ4, நாள்.26.02.2020—ன்படியானது மன்றம் பார்வையிட்டு, பதிவு செய்யலாம்.

**<u>தீர்மானம் எண்.716 அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் :16</u>

மாவட்ட ஆட்சித் தலைவர், இராமநாதபுரம் அவர்களின் கடிதம் ந.க.எண். 50/செ.ம.தொஅ/2020 நாள். 24.02.2020—ல் தெரிவித்துள்ளபடி, இந்நகராட்சி அடிக்கல் நாட்டு விழாவிற்கு வருகை தரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், துணை முதலமைச்சர் மற்றும் அமைச்சர் பெருமக்கள் மற்றும் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் வரவேற்று தினமலர் நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்ட வகைக்கு கட்டணம் ரூ.16,934/—க்கு பட்டியல் எண்.430 நாள்.01.03.2020ன்படியான பட்டியல் இந்நகராட்சிக்கு 10.03.2020—ம் தேதி வரப்பெற்றுள்ளது. மேற்படி பட்டியல் ரூ.16,934/— மட்டும் வழங்குவதற்கு மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

(கோப்பு எண்.425/2017/இ1)

<u>அலுவலகக் குறிப்பு:</u>

தினமலர் நாளிதழ் மதுரை விளம்பர கட்டணம் ரூ.16,934/—யை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.717 அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>பொருள் :17</u>**

மாவட்ட ஆட்சித் தலைவர், இராமநாதபுரம் அவர்களின் கடிதம் ந.க.எண். 50/செ.ம.தொ.அ/2020 நாள். 24.02.2020—ல் தெரிவித்துள்ளபடி இந்நகராட்சியின் வளர்ச்சித் திட்டப்பணிகள் தினந்தந்தி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்ட வகைக்கு கட்டணம் ரூ.30189/—க்கு பட்டியல் எண்.MDU1920-0028988, நாள்.01.03.2020ன்படியான பட்டியல் இந்நகராட்சிக்கு 06.03.2020—ம் தேதி வரப்பெற்றுள்ளது. மேற்படி பட்டியல் ரூ.30,189/— மட்டும் வழங்குவதற்கு மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.
(கோப்பு எண்.425/2017/இ1)

<u>அலுவலகக் குறிப்பு:</u>

தினந்தந்தி நாளிதழ் மதுரை விளம்பர கட்டணம் ரூ.30,189/—யை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.718 அனுமதிக்கப்பட்டது.</u>**

ஒம்/— ஆ. தனலெட்சுமி,பி.காம்
தனி அலுவலர் / ஆணையாளர்(பொ)
கீழக்கரை நகராட்சி.

/ உண்மை நகல் /

ஆணையாளர் (பொ)
கீழக்கரை நகராட்சி.